[முற்பகல் 10-10].

(2) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஈ) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அமைச்சரவையின் ஒருகொள்கையை நிராகரிக்கும் தீர்மானங்கள், பேரவையின் 55-வது விதியின் கீழ், பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. அவற்றின் விவரங்களை நான் இப்போது பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1.	திரு. க. சுப்பு	தொழிலாளர்களுக்கு விரோதமாக தமிழக அரசு பின்பற்றிவரும் கொள்கை.
2.	திரு. துரை முருகன் ..	காவல் துறையினரின் பிரச்சினையைத் தீர்ப்பதில் இவ்வரசின் கொள்கை.
3.	திரு. கூத்தகுடி ச. சண்முகம், திரு. பொ. உத்திராபதி.	தமிழ்நாடு போலீஸ் சங்கம் அமைப்பது பற்றி அரசின் கொள்கை.
4.	திரு. செ. சிவசாமி ..	அரசின் உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்ட கொள்கை.
5.	திரு. சொ. அழகர்சாமி, திரு. செ. சிவசாமி.	அரசின் விவசாயிகள் சம்பந்தப்பட்ட கொள்கை.
6.	திரு. எம். செல்வராஜ்	நம் மாநிலத்திலுள்ள விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தமிழக அரசின் கொள்கை.
7.	திரு. எம். ஏ. லத்தீப்	பிற்பட்டோர் நலனுக்கான இவ்வரசின் கொள்கை.
8.	திரு. மு. அரங்கநாதன்	தேசியமயக் கொள்கைக்கு விரோதமான இவ்வரசின் கொள்கை.
9.	திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. அ. செல்லப்பா.	அரசின் விவசாயிகள் சம்பந்தப்பட்ட கொள்கை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 27]

10. திரு. ரகுமான்கான் .. இந்த அரசு தனியார் பேருந்து களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தைப் பற்றிய கொள்கை.

11. திரு. ஆ. நடராசன் .. தமிழ்நாட்டிலுள்ள பின்தங்கிய மக்களின் நலனைப் பாதிக்கும் வகையில் அரசு தன்னிச்சையாக பிறப்படுத்தப் பட்ட மக்களுக்கு ஒன்பதாயிரம் ரூபாய் என்ற வருமானம் உள்ளவர்களை முன்னேறிய வகுப்பினராக கருதுவது என்ற இந்த அரசின் கொள்கை.

12. திரு. டி. ஆறுமுகம் .. தமிழ்நாட்டிலுள்ள 12,000 ஊராட்சி மன்றங்களைக் கலைத்து அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை நீக்கிவிட்டு ஜனநாயக முறையில் தேர்தலை உடனடியாக நடத்தாமல் இந்த அரசு பின்பற்றி வரும் கொள்கை.

13. திரு. க. அன்பழகன் .. தமிழகத்தில் அமைதி சீர்குலையவும் மக்களின் பல்வேறு பிரிவினரிடையே குழுறல் ஏற்படவும், அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கை.

14. திரு. டி. ராசரத்தினம் மதுவிலக்குச் சட்டத்தை அமுல் ஆக்குவதில் இந்த அரசு பின்பற்றி வரும் நிலையற்ற கொள்கை.

15. திரு. கா. சுப்ரவேலு .. ஆதித் திராவிடர்களான அரிஜன பெருங்குடி மக்கள் மேம்பாட்டிற்கு இந்த அரசு

		சரியான திட்டம் தீட்டி நடைமுறைப்படுத்தாததோடு இதுவரை இருந்தவைகளையும் இழந்து அவர்கள் நலன் புறக்கணிக்கப்படுகிறது பற்றி.
16.	திரு. து. புருஷோத்தமன்	நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நூல் கிடைப்பதில் தட்டுப்பாடு, நூல் விலை ஏற்றம் போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்காமல் நெசவாளர்கள் பிரச்சினையில் இந்த அரசு பின்பற்றி வரும் கொள்கை.
17.	திரு. எம். மணிமாறன்	என்.ஜி.ஓ.க்களின் பிரச்சினைகளை சுமுகமான முறையில் அணுகி தீர்ப்பதற்குப் பதிலாக அவர்கள் போராட வேண்டிய நிலையை உண்டாக்கிய இந்த அரசின் கொள்கை.
18,	திரு. ஓ. சோ. வேலுச்சாமி.	மாநில அரசு அலுவலர், ஆசிரியர்கள், காவல்துறையினர் ஆகியோரது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசு கையாளுகின்ற தெளிவற்ற அலட்சியப் போக்கினால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையையும், நிர்வாகச் சீர்கேட்டையும் வளர்த்துவிட்ட தமிழக அரசின் போக்கு.
19	திரு. டி. இராமசாமி ..	தமிழக விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்கள் அனைத்திற்கும் கட்டுப்படியாகின்ற விலை கிடைக்காமலும், விவசாயத்திற்குத்

		தேவையான உரம், பூச்சி மருந்துகள், டீசல் போன்றவைகளின் விலைகள், மற்றும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டும் உள்ள நிலையில் விவசாயிகள் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அவதிப்படுவதற்கு முழுமையான நிவாரணம் அளிக்காதது பற்றி.
20.	திரு. ஏ. ஆர். மாரிமுத்து	தமிழ்நாட்டின் பல்வேறு பிரிவு மக்களின், குறிப்பாக, விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், காவல் துறையினர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் பிரச்சினைகளில் சரியான உடனடித் தீர்வு காண முடியாததினால் ஏற்பட்டுள்ள அமைதியின்மைக்குக் காரணமான தமிழக அரசின் கொள்கை,
21.	திரு. சோ. பாலகிருஷ்ணன்	தமிழக அரசின் நிலையற்ற கல்விக் கொள்கையின் காரணமாக பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் பல நாட்கள் மூடிக்கிடக்கின்ற நிலையும், ஆசிரியர்களையும் மாணவர், மாணவிகளையும் நூற்றுக்கணக்கில் கைது செய்தும் கல்விக்கூடங்களில் அமைதியின்மையை உருவாக்கியதற்கு.
22.	திரு. என். கிட்டப்பா	ஆசிரியர்களின் பிரச்சினைகளை சுமுகமான முறையில் அணுகித் தீர்ப்பதற்குப் பதிலாக அவர்கள் போராட வேண்டிய நிலையை உண்டாக்கிய இந்த அரசின் கொள்கை.

[1979 அக்டோபர் 27

நேற்றையதினம் அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவின் படி. பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானம் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை கொண்டு வர பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

''தமிழகத்தில் அமைதி சீர்குலையவும், மக்களின் பல்வேறு பிரிவினரிடையே குமுறல் ஏற்படவும், அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது.''

அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களைத் தம் இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(24-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)

தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறது. தீர்மானத்தை பேராசிரியர் திரு. க.அன்பழகன் அவர்கள் முன்மொழிந்த பின், யாராவது ஒரு உறுப்பினர் வழிமொழிய வேண்டும். பின்னர் இன்று விவாதம் தொடரும்.

திரு. சி. ஆறுமுகம் : நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன், அதைப்பற்றி தாங்கள் ஒன்றும் குறிப்பிடவில்லையே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி என்னுடைய அறையில் வந்து கேளுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : என்ன காரணத்திற்காக நீங்கள் அதை வாசிக்கவில்லை என்பதையாவது சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி என் அறைக்கு வந்து கேட்டால் சொல்லுகிறேன். பேராசிரியர் திரு. க.அன்பழகன் அவர்கள்........

5. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் அமைதி சீர்குலையவும், மக்களின் பல்வேறு பிரிவினரிடையே குமுறல் ஏற்படவும், அவர்கள்

1979 அக்டோபர் 27]

கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்பு தெரிவிக்கிறது.''

என்ற இந்த கண்டனத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதை நான் வழிமொழிகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுவதற்கு முன் அவைக்கு ஓர் அறிவிப்பு.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

உ பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

20—10—1979 அன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்:—

27—10—1979.. (சனிக்கிழமை)	1 1979-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையை அளித்தல். 2 மற்ற அலுவல்கள்— அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.
28—10—1979.. (ஞாயிறு)	விடுமுறை.
29—10—1979.. (திங்கள்)	காலையும் மாலையும் பேரவை கூடும். அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்-மேலும் விவாதம்.
30—10—1979.. (செவ்வாய்)	1. கேள்வி நேரம் இல்லை. 2. அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம்—29 ஆம் தேதி விவாதம் முடிவுறாவிட்டால் 3. 1979-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். 4. மேற்படி நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.